www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Ts10T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**

**மூன்றாம் திருப்புதல் தேர்வு - மார்ச் 2023**

06-03-2023

-----

**வகுப்பு 10**

**தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு : **இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் செந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**பகுதி - I (மதிப்பெண்கள் : 15)**

**15×1=15**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.**

1) ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) வஞ்சப் புகழ்ச்சி அணி

இ) இரட்டுற மொழிதல் அணி ஈ) தீவக அணி

2) 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம், உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

3) குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி

இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

4) 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்

அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன்

இ) திருக்குறள் ஈ) நற்றினை

5) மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்

இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

6) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

7) மேன்மை தரும் அறம் என்பது ............

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம்செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

8) **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

| | |
|---|---|
| அ) கொண்டல் | 1) மேற்கு |
| ஆ) கோடை | 2) தெற்கு |
| இ) வாடை | 3) கிழக்கு |
| ஈ) தென்றல் | 4) வடக்கு |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

9) தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ..........

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

10) எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் - தேமா - மலர் ஆ) கூவிளம் - புளிமா - நாள்

இ) தேமா - புளிமா - காசு ஈ) புளிமா - தேமா - பிறப்பு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



11) 'இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்' - இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

'செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறோர் புகழுரையும்'

12) 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13) 'செந்தமிழ்' என்பது

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத் தொகை

14) உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ்மொழியை இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை

15) வேறோர் புகழுரையும் - இத்தொடரில் 'வேறோர்' என்பது

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க**

அ) தமிழ்த்தென்றல் திரு.வி.க போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் பெற்றவர் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார்

ஆ) நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து

17) தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

18) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு எடுத்துக்காட்டு தருக.

19) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக?

20) சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை விளக்குக.

21) குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச் செய்யும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **5×2=10**

22) 'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர் மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்
இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

23) **தொடரில் விடுபட்ட இடங்களை வண்ணங்களால் நிரப்புக**

அ) வானம் ........... தொடங்கியது. மழை வரும் போலிருக்கிறது.

ஆ) அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ...........

24) **இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) மலை - மாலை ஆ) தொடு - தோடு

25) **கலைச்சொற்கள் தருக.**

அ) Modern Literature ஆ) Bio technology

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



26) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

27) பழமொழிகளை நிறைவு செய்தல்

அ) ஒரு பானை ............ ஆ) அளவுக்கு மிஞ்சினால் .........

28) 'அமர்ந்தான்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2×3=6

29) புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

30) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பன குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31) **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற் கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரச் சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள் வகைகள் உள்ளன.

அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?

ஆ) கோதுமையின் வகைகளைக் குறுப்பிடு

இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2×3=6

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33) முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாகக் கு.ப.ரா. கவிபாடுகிறார்?

34) **அடிபிறழாமல் எழுதுக.**

'விருந்தினனாக' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்

**(அல்லது)**

'நவமணி வடக்கயில்' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2×3=6

35) அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கின்றான்.

அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

36) நிரல்நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) **அலகிட்டு வாய்பாடு தருக.**

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38) அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

39) அ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' எனும் உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) அலைபேசியின் நன்மை தீமைகளை விளக்கி வெளியூரில் உள்ள நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



41) வீட்டு எண் 54, பொதிகைநகர் தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் இளஞ்சேரனின் மகன் கபிலனுக்காக, கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42) அ) பள்ளியிலும் வீட்டிலும் உன் செயல்களை அட்டவணைப்படுத்துக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன் | வீட்டுப் பணிகளைப்பகிர்ந்து செய்வேன் |
| | |
| | |
| | |

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க**

1. Education is what remains after one has forgotten what one has learned in school. - Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week - Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light - Aristotle
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts - Winston Churchill

**பகுதி - V (மதிப்பெண்கள் - 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.** **3×8=24**

43) அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும் என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44) அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே' என்னும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பெண் சாதனையாளர்கள் பற்றி எழுதுக.

45) அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொதுவாழ்வில் தூய்மை - எளிமை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.

**(அல்லது)**

அ) முன்னுரை - விசும்பின் துளி - விண்ணின் மழைத்துளி - வான் சிறப்பு - வள்ளுவன் வாய்மொழி - மரம் வளர்ப்போம் - பசும்புல் நுனி - இயற்கையைப் போற்றுவோம் - முடிவுரை.

- - - - - -